# மனனப் பகுதி - தரம் 10

## திருவிவிலியப் பகுதி

1. ஆண்டவரே, உம் கூடாரத்தில் தங்கிடத் தகுதியுள்ளவர் யார்? உம் திருமலையில் குடியிருப்பவர் யார்? (திருப்பாடல் 15:1)

2. ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர், நீடிய பொறுமையும் பேரன்பும் உள்ளவர். (திருப்பாடல் 103:8)

3. அவர் உரைத்தது: என் ஆற்றலாகிய ஆண்டவரே! உம்மிடம் நான் அன்புகூர்கின்றேன். (திருப்பாடல் 18:1)

4. "நீங்கள் மனம் மாறுங்கள். உங்கள் பாவங்களிலிருந்து மன்னிப்புப் பெறுவதற்காக ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவின் பெயரால் திருமுழுக்குப் பெறுங்கள். அப்பொழுது தூய ஆவியைக் கொடையாகப் பெறுவீர்கள். (தி.ப. 2:38)

5. "உலகின் ஒளி நானே என்னைப் பின்தொடர்பவர் இருளில் நடக்கமாட்டார் வாழ்வுக்கு வழி காட்டும் ஒளியைக் கொண்டிருப்பார்" (யோவான் 8:12)

6. ஆண்டவருடைய ஆவி என்மேல் உளது, ஏனெனில், அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும் சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், (லூக்கா 4:18)

7. ஆனால், தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும் யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லைவரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்" (தி.ப. 1:8)

8. இஸ்ரயேலே, நாம் பேறுபெற்றோர், ஏனெனில் கடவுளுக்கு உகந்தது எது என்பதை நாம் அறிவோம். (பாரூக்கு 4:4)

9. ஆண்டவரைக் காண்பதற்கு வாய்ப்புள்ளபோதே அவரைத் தேடுங்கள் அவர் அண்மையில் இருக்கும்போதே அவரை நோக்கி மன்றாடுங்கள். (எசாயா 55:6)

## நிசேயா நம்பிக்கை அறிக்கை

10. வாழ்வோருக்கும் இறந்தோருக்கும் தீர்ப்பளிக்க மாட்சியுடன் மீண்டும் வரவிருக்கின்றார். அவரது ஆட்சிக்கு முடிவு இராது. பகுதி – (8)